உ

சிவமயம்



அணையா அன்புச் சுடர்

யாழ்ப்பாணம் மல்லாகத்தை பிறப்பிடமாகவும்

லண்டனை வதிவிடமாகக் கொண்டவரும்

**திரு திருமதி சுப்பிரமணியம் தம்பதிகளின் புதல்வியுமாகிய**

**அமரர் திருமதி விக்னேஸ்வரி நடனசபை அவர்களின்**

# நினைவு மலர்

**26.01.2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

ஆலமரமாய் எங்கள் குடும்பத்தில் அன்பு விழுதுகள் பரப்பி
அறிவுரைகள் பல எமக்கு ஊட்டி
ஆனந்தம் நிதம் நிலைக்க நீண்ட வழிகாட்டி
அமைதிப் பெருவாழ்வில்
ஆழ்கடலாய் அலைபரப்பி
இல்லற வாழ்வு தன்னில் இனிதே இசைபரப்பி
சுற்றத்தார் போற்றும் பெருவாழ்வு வாழ்ந்து
உற்றத்தாருக்கு உவகைகள் பல தந்து
நண்பர்களின் பூங்காவில் நடுமரமாய் நின்று
இம்மண்ணில் இனிதாய் இதயங்களில் வாழ்ந்து இறைவனடி
சேர்ந்த எங்கள் அருமைத் தெய்வத்திற்கு
இறையருள் இசையூட்டி இனிதே விடைதருகின்றோம்

உடல் மட்டும் நீங்கினாலும் உள்ளத்தில் என்றும்
உறைந்திருக்கும் அன்புத் தெய்வத்திற்கு
உங்கள் பிள்ளைகளின் காணிக்கையாக
இதயங்களில் இருந்து

**அன்புடன்**
**பிள்ளைகள், மருமகன்**
**பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் திருமதி விக்னேஸ்வரி நடனசபை அவர்கள்



பூவுலகம்

23 * 12 * 1930

வானுலகம்

26 * 12 * 2012

## திதி வெண்பா

நந்தன வருடம் மார்கழித் திங்கள் 11ம் நாள்
புதன் கிழமை திரயோதசி திதியில் மேன்மை மிக
விக்னேஸ்வரி நடனசபை இம் மண்ணலகம்
துறந்து விண்ணுலகம் கலந்தார் இனிய இறைவனடனே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரந்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவ பெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கழுந் தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து கந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
தில்லை சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## புராணம்

உலகெலாம் உணர்ந்து ஒதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமி அந்தாதி

தனந்தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வவடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்வர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராம் கடைக்கண்களே!

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்

திருச்சிற்றம்பலம்

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிசூழும் தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்
தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்
விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றென்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாய் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையார் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி

மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் சிந்த அடியேர்க்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றினி வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்

தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mrs.ANANTHALAKSHMI JEYAHARAN
**ASSOCIATE PROFESSOR IN HOMESCIENCE,**
**QUAID-E-MILLATH GOVT.COLLEGE FOR WOMEN,**
**CHENNAI-600 002. Mobile No.9444520811**


**"A wife of noble character who can find? She is worth far more than rubies".**

**Proverbs 31:10 in Holy Bible.**

அன்னையின் உருவமாய், அமைதியின் பிறப்பிடமாய்
அன்பினைப் பொழிந்து, அசதியின்றி
அறுசுவை உணவுகளை சமைத்து, அழகுற
அள்ளிப் பாங்காய் அனைவருக்கும் பகிர்ந்து
அளவிலா இன்பம் கொள்வீர்!

ஆர்வமாய் அருமையாய் அழகுற வீட்டை வைப்பீர்!
ஆசையாய் பேசி மகிழ்வீர்!
ஆறுதலின் வார்த்தையால் இதயங்கள் பல கவர்ந்தீர்!
ஆக்கமாய் நன்மைகள் அனைவருக்கும் செய்தீர்!
ஆழ்கடல் தாண்டி சொந்த இடம் செல்ல நினைத்தீர்!

இயற்கையிலே, பூந்தோட்டம் அமைப்பதில் ஈடுபாடு கொண்டீர்
இல்லறத்தில் நல்லறம் பூண்டு எடுத்தீர் கணவரின்
இசைவு பெற்றே சிறு முடிவுகளையும்!
இனிமையான எளிமையான உமது சாயல்
இதமாக இதயத்தின் காயங்கள் ஆற்றும்
இன்பமாய் அனைவரும் வாழ நினைத்தீர்!
இவையெல்லாம் என்னை ஈர்த்தது உம்பால்!

ஈகை உணர்வோடு ஈந்திடுவீர் பரிசுகளை இன்பமுடனே!
ஈடில்லா உமது அன்புப் பணிக்கு கடவுள்
ஈந்திட்ட இரு புதல்விகளோடு எத்தனையோ
பெற்றெடுக்காத புதல்விகள் உமக்குண்டு!

உறவுகள் மேம்பட உள்ளம் கொண்ட நீர்!
உள்ளதை உள்ளதென்று உரைத்திடுவீர்!
உண்மையிலே நன்மை கண்டீர்!
உழைப்பிலே உத்தம குணத்திலே இலங்கை, புருனையிலே
உயர்வு கண்டீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்புகள் பலவிதம் உருவாக்குவதில் விருப்பம் கொள்வீர்!

ஊரார் பிள்ளைகளை ஊட்டி வளர்த்து இன்பம் கண்டீர்!
ஊர்மெச்சிட வாழ்ந்த நீர் விளம்பரத்தில் வெறுப்பு கொண்டீர்!
ஊக்கம் கொண்ட நீர் ஆங்கிலம் மற்றும் புவியியல் புலமையில் அசத்திடுவீர்!

எண்ணி, எண்ணி பார்க்க வைத்தீர்
என் வாழ்வில் உமது பங்கை!
எப்படியாய் புது வருட பிறப்புகளை
எட்டிப் பிடிக்க நாம் கொண்டாடி மகிழ்ந்தோம் என்று நிழற்படங்கள் சொல்கின்றன!
எடுப்பாய் உடுத்தவதிலும், உடுத்துவிப்பதிலும், நாட்டம் கொண்டீர்!
ஏழைகளுக்கு உதவுவதில்
ஏக்கம் கொண்ட உமது பண்பினை
ஏணி வைத்து ஏறினாலும் பிடிக்க முடியாது!

ஐயம், நீக்கும் உறுதுணையாய்
ஐயம் போக்கினீர் புரியாத புதிர்களுக்கு!

ஒற்றுமையில் நன்மை கண்ட நீர்
ஒருங்கிணைந்தே கணவரைப்போல்
டிசம்பர்மாதத்திலும், 82அகவையிலும் மறுலோகம் சென்றீர்!

ஓங்கிய புகழில் மங்காத நீர்!
ஓடவிட்டீர் எங்கள் கண்களில் கண்ணீரினை!

ஔஷதமாய் இருந்த நீர்
இஃதே நல்லது என்று இவ்விடம் பெயர்ந்தீரோ?

**"Her children arise up, and call her blessed;
her husband also, and he praiseth her"**

**Proverbs 31:28 in Holy bible**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Mrs Vigneswary Nadanasabai (Periyababy) my sister-in-law

I heard with great shock when Mr Sarvananthan informed us from London on 26th December 2012 that Periyababy passed away peacefully. When I heard this sad news from him, my wife Ganeswary and I started to cry loud in our room in Canada.

I vividly remember the times when I and my wife lived in Mallakam house after marriage. Periyababy was a smart lady with a smiling face. Being a graduate (B A Geography) she was teaching at Tellippalai Union College. Many students of Tellippalai as well as Mallakam had the opportunity of studying under her guidance and became prominent.

As all the members of her family used to call her Periyababy, it has become a habit for me also to call her Periyababy. She got married to Mr Nadanasabai of Alaveddy, a beautiful village with many prominent Pillaiyar Temples.

With her pleasant habits and hospitality, Periyababy lived with her husband pleasantly and gave birth to two daughters, Sharmini and Jeyanthi. With his devoted wife and children, Mr Nadanasabai had the opportunity of living in Coimbatore, India. Therafter, they came to London and lived there in Green Lane, New Malden. Their daughters, Sharmini and Jeyanthi got married. Sharmini blessed with two sons and Jeyanthi with two daughters.

As a matter of fact, Periyababy and her husband would readily help any relatives who needed financial help. As the climatic



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

condition of London did not suit her husband, they both have come to Sri Lanka, bought a flat in Mayura Place and lived peacefully. During that time, my family was staying at Quarry Road, Dehiwela. Every weekend when I was off, my wife used to take me to Mayura Place to help them. Still we remember the pleasant memories of those days. They worshipped God with confidence. They have conducted festivals both in Tellippalai Durkai Amman Temple and Alaveddy Kurukalkinatady Pillayar Temple.

In the year 2006, my wife and I migrated to Canada on sponsorship as both of our daughters' families are in Canada. Unfortunately, Mr Nadanasabai passed away after our migration to Canada. Then on the kind request of Periyababy, my wife and I went to Sri Lanka in 2007 and stayed with her at Mayura Place for about 5 months, rendering necessary help. After somtime, as Periyababy could not stay alone, she moved to London. During her latter part of life, she stayed with her daughters' teaching her grand children. During the year 2010, my wife and I have went to London from Canada on the kind request of Periyababy and stayed there with her for about five months and returned.

Periyababy was a loving wife, mother and an adoring grandmother.

We all pray may her soul rest in peace.

***K Vijayaratnam***
***Canada***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## My Dear Ammamma

My ammamma was an extremely kind and enjoyable person to be with. I have so many heart-warming memories of her, I just don't know where to start. There are so many adjectives that I can use to describe my ammamma such as she is generous, and kind hearted. But above all, I can say with confidence that my ammamma was a person full of wisdom. Her life experiences truly made her a pillar of strength- (even at her age.) There are many things that she shares with me and her golden thoughts and wise words have changed my life one day at a time.

One of my best memories of her was when she helped me a build a river for my geography project at school. She showed me her superior intelligence in her subject, which (of course) was no shock to me. She was a brilliant geography teacher, and I wish she could still be here with me to teach me. (Now where can I run to if i need help?) When I was doing the project, I found out that her intelligence was too good for my brain that I let her do most of the model work. And would you believe it or not I got an A*, all because of my lovely, dear ammamma. If it wasn't for her hard work, I would have probably ended up in the detention room, and my parents wouldn't have enjoyed that. Also I know amma takes care of you and gives you good food except on those Wednesday's when she gives couscous which I know we both don't like.

I would just like to say thank you ammamma for all your kindness and sweet words and for your smiles and your hugs. Thank you for the funny stories and all the wonderful presents you have given to me. Thank you for making my life far more special than it ever could have been. I love you more than you may have realised and I will always remember you. Thank you for being such a good grandmother, you will always be in my heart.

***By Thajevan Mahendran***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Your service will be remembered
## – *Mallakam Makkal Manram*

I am honoured to say a few words about Vigneswari Acca, on behalf of members of Mallakam Makkal Manram. We would like to express our deepest sorrow at the loss of Mrs Vigneswari Nadanasabai, much loved sister of our dear friend Sarvananthan.

Mrs Vigneswari Nadanasabai was Mallakam through and through, having been born in Mallakam to parents who were themselves born in Mallakam.

In her days as a student she studied at Ramanathan College and then went on to University. After graduating from Peradeniya University with a B A, she taught geography at various places such as Tricomalee, Colombo and then finally at Union College Tellippalai. At Union College Tellippalai, she was well respected by her students and fellow teachers alike for her intelligence, compassion, hard work and commitments.

Mrs Vigneswari Nadanasabai maintains a place in her heart for poor people, even after she moved to Brunei with her husband to continue her teaching career. They both provided financial support to enable many underprivileged students to study at excellent schools and universities in India, giving them the best opportunities for their future.

She cared for people and was the type of person who would never hurt a fly.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mrs Nadanasabai recently donated 5 larchams of her land in Mallakam to Mallakam Makkal Manram for the purpose of continuing her life's work of helping children to learn.

MMM will be constructing a community building on the land so kindly provided and this building, hopefully will be named in her and her husband's honour so that her life time ambition and community service will inspire all of Mallakam and her memory will live on forever in all of our hearts.

We MMM offer condolences to her two daughters and 4 grandchildren who survive Mrs Nadanasabai.

While she is no longer with us, we hope her example will continue to illuminate the lives of all who knew her.

My last word is Acca, we will all miss you.

May PalamPillaiyar and Neeliampanai Pillaiyar bless you.

***Sivasubramaniam Sivathillainathan***
***Mallakam Makkal Manram***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது பாசமிகு அக்கா
## திருமதி விக்னேஸ்வரி நடனசபை (பெரிய பேபி)

எனது பாசமிகு அக்கா இறைபதம் எய்திய செய்தியை அறிந்து கண்ணீர் சொரியக்கதறி அழுதேன். வனப்புமிகு எங்கள் மல்லாகக் கிராமத்தில் வாழ்ந்தது எங்கள் குடும்பம், எங்கள் ஐயா சுப்பிரமணியம் அம்மா தங்கரத்தினம் இவர்களுக்குப் பிறந்தவர்கள் விக்கினராசா, விக்னேஸ்வரி, இராஜேஸ்வரி, சிவானந்தன், கணேஸ்வரி, விவேகானந்தன், சர்வானந்தன் ஆவார்கள். எங்கள் அக்கா விக்னேஸ்வரியை பெரியபேபி என்றும் மற்ற அக்காவைச் சின்னபேபி என்றும் அழைப்பது வழக்கமாகி விட்டது. பேராதனியப் பல்கலைக்கழகத்தில் B.A பட்டதாரிப்படிப்பை நிறைவேற்றிய எனது அன்புச் சகோதரி திருக்கோணமலையில் சண்முக வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

திருமணப் பருவமடைந்த பெரியபேபி அக்கா புகழ் பெற்ற அளவெட்டிக் கிராமத்தில் B.A கனகசபை – தெய்வானைப் பிள்ளை தம்பதிகளின் புதல்வரான நடனசபையை மணம்புரிந்தார். பட்டதாரியான பெரியபேபி அக்கா தெல்லிப்பழையில் அமைந்துள்ள Union College இல் கல்வி கற்பித்து மாணவர்களுக்கு அறிவு புகட்டி முன்னேற வைத்தாரென்றால் மிகையொன்றுமில்லை. எங்கள் குடும்பத்தில் எல்லோரும் என்னை தங்கச்சி என்றே அழைப்பார்கள்.

விசுவாசமுள்ள மனைவியாய், கடமையுணர்வு தவறாமல் வாழ்ந்து வருகையில் சாமினி, ஜெயந்தி என்ற இரு குழந்தைகளைப் பெற்றெடுத்து பாசத்துடன் வளர்த்து திருமணமும் செய்து வைத்துப் பேரப்பிள்ளைகளையும் கண்டார். M.A. பட்டதாரியான கணவன் நடனசபையுடன் அன்புடனும் பாசத்துடனும் நல்வாழ்வு வாழ்ந்தார். கடவுளின் உண்மைப் புகழை விரும்பி வணங்கி வாழ்ந்த எனது அக்கா தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலிலும் அளவெட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்கள் கிணத்தடிப் பிள்ளையார் கோவிலிலும் வருடா வருடம் திருவிழாக்கள் செய்து ஆன்மீக வாழ்வு வாழ்ந்தவர்.

இனத்தவர் எவருக்கும் பண உதவி செய்ய வேண்டுமென்றால் பெரியபேபி அக்கா சரி, நடனத்தான் சரி பின்னிற்க மாட்டார்கள், என்பதைக் கூறத் தேவையில்லை. வியாகேஸ்வரி அக்கா மகன் சேர்ந்த குமாரனுக்கு இந்தியாவில் திருமணம் நடந்த பொழுது நானும் சென்றிருந்தேன். அப்பொழுது கோயம்புத்தூரில் பெரியபேபி அக்கா வீட்டில் தங்கியிருந்ததையும் மறக்கவே முடியாது. பட்டதாரிகளான அக்காவும் கணவரும் Bruneiல் நாட்டிலும் ஆசிரியர்களாகக் கடமையாற்றினார்கள் என்பதையும் கூற வேண்டும்.

2010ம் ஆண்டிலும் நானும் கணவரும் லண்டனுக்குச் சென்று 5 மாதம் அக்காவுடன் தங்கி வந்ததும் நினைவில் நீங்காது நெஞ்சில் நேர்மையும், அன்பும் கடமையுணர்வும் கொண்டு வாழ்ந்த பெரியபேபி அக்காவின் ஆன்மா பேரின்ப மோட்ஷ வாழ்வுபெற அஞ்சலி செலுத்துவோமாக.

**கணேஸ்வரி விஜயரத்தினம்**
**கனடா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I have lost my dear Ammamma

I am devastated that I have lost my grandmother, a lady full of wisdom who had taught me and told me many things. There are many words I could use to describe my grandmother, caring, entertaining as she always cheered me up when I was feeling down and shared many stories from her childhood. My grandmothers words of wisdom have helped me become a better person. She would always help me in my studies and would read books with me every night which was a helping hand.

Today I am going to share with you my two favourite memories of my grandmother. The first memory is when my grandmother used to play monopoly with me and somehow always used to beat me which very much perplexed me.

My second memory is when my grandmother helped write and learn a speech off by heart in Tamil for a concert that I was performing in. I was very scared and nervous but it was my grandmother's support that gave me the confidence to perform. That memory will stay in my heart forever and I am very grateful for that!

I will never forget you because you will forever stay in my heart. Thank you very much for everything you have taught and told me. You are the best grandmother ever!!

***Anjevan***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## My Dear Peri Acca – Sarvu (Sarvananthan)

Peri Acca, you are not with us anymore but the support and advice you gave me over the years will be with me forever. I am the youngest in the family and I was lucky to get the help of everyone in the family. You entered University in the mid fifties and set the bar high for the rest of the family. Your were multi-linguistic and very fluent in Singalese and it enabled you to stay and study at Peradeniya even during the communal trouble period.

You earned the friendship and respect of many teachers at Ramanathan College by providing teaching cover during your university holidays when they were on maternity leave.

They were very keen to employ you and the principal of Shanmuga Vidyalayam, Trinco, was the first one to offer you a job, soon after you completed your degree. It gave us the opportunity to live in different parts of Sri Lanka at our early age. When you moved to Colombo we took the first train and landed in your place to spend our school holidays.

You got transferred to Union College, Tellippalai in the mid 60s and you were there until you took early retirement. Your passion for education never stopped and you studied your B Ed in Madras and MA at Durham University even after your retirement. I still remember the experience you had in Tunisia during the two weeks expedition trip as part of your project. You were the only coloured member in the team and you somehow managed it.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

After my disappointing performance at A levels I became a teacher and I was teaching at Kandy. You encouraged me to continue my higher studies and arranged everything including necessary financial support. It enabled me to go to India and then to UK.

We are very proud that we had a sister like you, friends and teachers who have worked with you at Trinco, Tellippalai and Brunei always talk highly of you.

I was devastated when both daughters met with an accident and were sleeping side by side in the hospital. You gave me the moral support saying "Thurkai Amman Kai Vidamatta, Kavalai Padathai". Yes, Thurkai Amman never let us down.

We will remember your smiling face forever.

***Sarvu***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Our Ammamma was so creative and full of ideas. We simply gave her some papers and colouring pencils. Just a few moments later she had made the most beautiful princess house. The house is still standing and we will treasure this along with all the other drawings she has done for us.

Ammamma was always very caring, even when she had lost her appetite she would always say to us "Eat, eat".

Furthermore she was very kind and helpful. She would always help us with our homework when I was stuck. When we were bored she would ask if we would like to play a game with her and we had always replied yes. She was a very fun and caring person. We will miss her lots and thank you Ammamma for everything you have done.

***By Snega & Arthiga***
***(Granddaughters)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Periamami

Your life was a true inspiration to us. We grew up hearing of your adventures as you followed your ambitions by travelling alone to Tunisia for the sake of your education. We saw that nothing was unachievable and were encouraged to follow our dreams in life.

On our visit to Sri Lanka in 2005 you showered us with great hospitality. Your overwhelming generosity and warmth made us feel immediately welcome and at home.

Periamami, you always took a keen interest in our lives and being a teacher yourself regularly inquired about our education. You were a fountain of knowledge and wisdom always offering to help wherever possible.
We feel privileged to have been a part of your life and still remember when we visited Coimbatore in 1993 where you made matching nighties for us on your sewing machine. So talented and loving.

When you came over to London you never missed any of our birthday parties and always gave us presents on each and every occasion. You have left a lasting impression on our lives and will be sorely missed. You will forever be in our thoughts and prayers.

Your loving nieces
***Kasthuri & Vaideki***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும் எங்களுடனே நீங்கள்

பெற்றெடுத்த பிள்ளைகளை
கற்றலிலே வழிநடத்தி
குற்றமற்ற வாழ்வு வாழ
பற்றுடனே பணியாற்றி
நற்செயல்கள் செய்திட்ட
அன்பு அம்மா!

ஆசையாய் வளர்த்து
ஆல்போல் தழைத்திருக்க
வழி செய்தீர்கள்
ஆலம் விழுதுகளாய் நாமிருக்க
ஆணிவேரும் அசைந்ததுவோ
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
அமைதி தேடிச்சென்றீர்களோ
ஆரிடம் பெறுவோம் ஆறுதலை
அழியாத உங்கள் நினைவுகளே
அணையா விளக்காய் துணையிருக்க
என்றும் எங்களுடனே நீங்கள்

**பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமார்ந்த நன்றி

எம் துயர் துடைக்க பல வழிகளிலும் முன்னின்று உதவிய கரங்களுக்கும், அம்மாவை இழந்து ஆறாத்துயரில் ஆறுதல் இன்றி இருந்தவேளையில், உலகு எங்கும் இருந்து வந்து எம்மை ஆறுதல்படுத்திய எங்கள் அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் நாம் நன்றி கூற இந்த வேளையில் கடமைப்பட்டுள்ளோம்.

கூடவே கூடியிருந்து எமக்கு உணவு ஊட்டிய உறவுகளுக்கும், தூரதேசத்திலிருந்து தொலைபேசியில் ஆறுதல் வார்த்தைகள் மூலம் எம்மை அரவணைத்தோருக்கும், இறுதி ஊர்வலத்தில் முன்னின்று உதவியவர்களுக்கும் அதில் பங்கு பற்றி எமக்கு ஆறுதல் வார்த்தை கூறியோர்க்கும், மேலும் பல்வேறு வழிகளிலும் உதவி நல்கிய அனைவருக்கும் எங்கள் இருகரம் கூப்பிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்

**அன்புடன்**

**மக்கள், மருமகன்,**

**பேரப்பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**



Designed & Printed @ JR Print, www.jrprint.com T : 0208 503 6643
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org